# “கரூருக்கு விஜய் தாமதமாகச் சென்றதுதான்41 பேர் உயிர்ப் பலிக்குக் காரணம்”!

## கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் பதிலடி!



சென்னை, ஜூலை 12-

“கரூரில் விஜய் தாமதமாக சென்றதுதான் உயிரிழப்புக்கு காரணம். பலரை மருத்துவமனையில் சேர்த்து உயிரை காப்பாற்றியது திமுக அரசு.

வெயில், தாகத்தால் 100 பேர் மயங்கினர். 60 பேர் உயிரை காப்பாற்றியது திமுக அரசு” என திமுக செய்தித் தொடர்புக் குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

கரூரில் இன்று மக்கள் சந்திப்பு கூட்டத்தில் பேசிய தமிழக முதல்வர் விஜய், கடந்த ஆண்டு செப்டம்பரில் நடந்த கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக பேசியுள்ளது தற்போது விவாதங்களை கிளப்பியுள்ளது.

கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக தற்போது பேசியுள்ள முதல்வர் விஜய், எதிர்பார்த்ததை விடவும் கூட்டம் அதிகமாக உள்ளது என எங்களை கரூர் போலீசார் அலர்ட் செய்திருக்கலாம். அவர்கள் நினைத்திருந்தால் பரப்புரை கூட்டத்தையே ரத்து செய்திருக்கலாம். ஆனால் காவல் துறையினரே எங்களை ஸ்பாட்டுக்கு அழைத்து வந்தனர். அன்றைக்கு கரூர் போலீசை நம்பிவிட்டேன். அதன் பின்னணியில் இப்படியெல்லாம் ஒரு நாடகம் உள்ளது என்று எனக்கு தெரியாது என தெரிவித்தார்.

திமுக அரசின் காவல்துறை சதி செய்ததாக குற்றம்சாட்டியுள்ளார் விஜய். விஜய்யின் இந்தப் பேச்சு தற்போது அரசியல் வட்டாரத்தில் விவாதங்களைக் கிளப்பியுள்ளது. இந்நிலையில் திமுகவின் செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், விஜய்யின் பேச்சுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய டி.கே.எஸ். இளங்கோவன், “கரூர் விவகாரத்தில், 10 மணி நேரத்திற்கும் மேலாக குடிப்பதற்கு தண்ணீர் இன்றி இருந்ததால், மயக்கமடைந்துதான் விழுந்தார்கள். அதுவும் பல பகுதிகளில் மயங்கி விழுந்தார்கள். மற்றபடி எந்த தாக்குதலும் நடைபெறவில்லை.

காவல்துறையால் வெளியிலிருந்துதான் பாதுகாப்பு வழங்க முடியும். கூட்டத்திற்குள் இருந்தவர்களுக்கு அருகில் இருந்தவர்கள்தான் பாதுகாப்பாக இருந்திருக்க முடியும். இது அரைகுறை அறிவுள்ளவர்களுக்குக்கூட தெரியும்.

கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.வெ.கவினர் எந்த உதவியும் செய்யவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைக் காப்பாற்ற திமுக அரசு செயலாற்றிக் கொண்டிருந்தபோது, விஜய் சென்னைக்கு தப்பி ஓடிவிட்டார். மக்களுக்கு என்ன ஆனது என்பது குறித்துகூட தவெக நிர்வாகிகள் கவலைப்படவில்லை. இதனையெல்லாம் திசைதிருப்பும் வேலையைத்தான் விஜய் செய்து வருகிறார்.

கரூர் உயிரிழப்பு சம்பவம் நடந்த அன்று சென்னைக்கு ஓடிவந்த விஜய், இன்று தான் கரூர் செல்கிறார். மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைக்கூட பார்க்கவில்லை. ஆனால், இன்று நியாயம் பேசிக்கொண்டிருக்கிறார்.

சட்டமன்றத்தில் ஆதாரம் இல்லாமல் பேசினால், எதிர்க்கட்சிகள் கேள்வி தான் கேட்பார்கள். அதற்கு பதில் சொல்லவில்லை என்றால் வெளிநடப்பு செய்வார்கள். இது சட்டமன்ற மரபே தவிர, எதிர்க்கட்சிகள் ஓடவில்லை. பார்ட்டி ஃபண்ட் பற்றி பேசுகிறீர்களே, தற்போது நடைபெறும் குதிரை பேரத்திற்கான பணம் எங்கிருந்து வருகிறது என்று பேசத் தயாரா?

அதிமுகவை தீர்ந்த சக்தி என்று கூறும் விஜய், அந்தக் கட்சியில் இருப்பவர்களை விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருப்பது ஏன்? கர்நாடகாவில் உள்ள கோவிலுக்குச் சென்றவர், அங்குள்ள முதலமைச்சரை சந்தித்து காவிரி நீர் குறித்து பேசாதது ஏன்?” எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

---

தமிழ்நாட்டில் திருச்சி கிழக்கு உள்ளிட்ட

# 5 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்த தடை!

## உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூலை 12-

தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ள திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தேர்தல் ஆணையத்துக்கு இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில், இரு தொகுதிகளில் போட்டியிட்ட முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்தார். அதே போல, கரூர் தொகுதி எம்எல்ஏ எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை தொகுதி எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர், பெருந்துறை எம்.எல்.ஏ. ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் எம்எல்ஏ இசக்கி சுப்பையா ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர்.

இவர்களின் வெற்றியை எதிர்த்து தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ள போது, இந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி, சென்னை உயர் நீதி மன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில், ‘தேர்தல் வழக்குகளில், தங்களை வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டும் என வேட்பாளர்கள் கோரிக்கை முன்வைப்பதுண்டு.

இடைத்தேர்தல் நடத்தி எம்எல்ஏவை தேர்ந்தெடுத்த பின், தேர்தல் வழக்கை தாக்கல் செய்த வேட்பாளரை வெற்றி பெற்றவராக நீதிமன்றம் அறிவித்துவிட்டால், ஒரு தொகுதிக்கு இரண்டு மக்கள் பிரதிநிதி என்ற நிலை ஏற்படும் என்பதால், தேர்தல் வழக்கு நிலுவையில் இருக்கும் வரை சம்பந்தப்பட்ட தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்க கூடாது என உச்ச நீதிமன்றம் 1967 முதல் 2018 ஆம் ஆண்டு வரை பல உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதனால் தேர்தல் வழக்குகளில் முடிவெடுக்கும் வரை இடைத்தேர்தல் அறிவிக்கக் கூடாது’ என வாதிடப்பட்டது.

தேர்தல் ஆணையம் தரப்பில், ‘தேர்தல் வழக்குகள் குறித்த ஆவணங்கள் இன்னும் தேர்தல் ஆணையத்துக்கு வரப்பெறவில்லை. அதனால், இந்த வழக்கில் நிலைபாட்டை தெரிவிக்க இயலாது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ‘ஜனநாயக நடைமுறையில் புனிதம் சம்பந்தப்பட்ட இந்த வழக்கில் மனுதாரரின் அடிப்படை உரிமை குறித்த கேள்வி பொருந்தாது; தேர்தல் வழக்கு முடிவுக்கு வரும் முன்பு அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்துவது அரசு பணம் செலவிடப்படுவதுடன், ஒரே தொகுதிக்கு இரண்டு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் சாசன பிரச்சினை எழும்’ என குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டதாக முன்வைக்கப்பட்ட வாதங்களை ஆராய வேண்டியுள்ளதாக தெரிவித்த நீதிபதிகள், இந்த வழக்கு தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம், மத்திய அரசு, சட்டப்பேரவை செயலாளர், முதல்வர் விஜய், எம்.எல்.ஏ.க்கள் எம்.ஆர்.விஜயபாஸ்கர், சி.விஜயபாஸ்கர், ஜெயக்குமார், இசக்கி சுப்பையா உள்ளிட்டோர் மூன்று வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை ஜூலை 31ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

அதுவரை, இந்த 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தேர்தல் ஆணையத்துக்கு தடை விதித்தும் உத்தரவிட்டுள்ளனர்.

---

சேலத்தில் – பாலியல் புகாரில் சிக்கிய

# தலைமை ஆசிரியருக்கு அதே பள்ளியில் பணி!

## த.வெ.க. அரசுக்கு மாற்றுத் திறனாளி ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்!

சேலம், ஜூலை 12-

பாலியல் புகாரில் சிக்கிய தலைமை ஆசிரியருக்கு மீண்டும் அதே பள்ளியில் பணி வழங்கிய தவெக அரசுக்கு மாற்றுத்திறனாளி ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சேலம் செவ்வாய்ப்பேட்டை பகுதியில் உள்ள அரசு பார்வையற்றோர் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்த தங்கவேல் என்பவர் மீது 2023ஆம் ஆண்டு பல்வேறு முறைகேடுகள் நடத்தியதாகவும் அந்த பள்ளியில் பயில்கின்ற மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் புகார் எழுந்தது. இதையடுத்து, அவர் மதுரை அரசு பார்வையற்றோர் பள்ளிக்கு மாற்றப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், தலைமை ஆசிரியர் தங்கவேலுக்கு மீண்டும் அவர் பணியாற்றிய பள்ளிக்கு இடமாறுதல் வழங்கப்பட்டுள்ளது. பாலியல் புகாரில் சிக்கிய தலைமை ஆசிரியருக்கு மீண்டும் அதே பள்ளியில் பணி வழங்கிய தவெக அரசிற்கு அனைத்து மாற்றுத்திறனாளி ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்கள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவை அரசு திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

---

மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில்

# 4-வது மண்டல மாமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்திரக் கூட்டம்!

## அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 11

சென்னை மாநகராட்சி நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்.கே.நகர், பெரம்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதியை சேர்ந்த மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்திர கூட்டம் தண்டையார்பேட்டை வள்ளலார் சாலை உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் எம்.சி தலைமை வகித்தார். பகுதி பொறியாளர் அன்பரசன், குமாரசாமி முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் தி.மு.க., ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஆகிய கட்சிகளை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தங்கள் வார்டில் உள்ள பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

அப்போது ம.தி.மு.க. கவுன்சிலர் ஜீவன் பேசும் போது, தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஆட்சி அமைந்துள்ளது, அதற்கு ஏற்றது போல் அதிகாரிகள் செயல்படுகிறார்கள், மாமன்ற உறுப்பினர் என்ற முறையில் எதை கூறினாலும், அவர்கள் கண்டு கொள்வதில்லை, செய்து கொடுக்க மறுக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு கூறினார்.

இதற்கு பதில் அளித்த மண்டல குழு தலைவர் முன்னாள் முதலமைச்சர் ஆட்சியில் தொடங்கப்பட்ட அனைத்து பணிகளையும் காழ்ப்புணர்ச்சிக் காரணமாக எக்காரணத்தை கொண்டு நிறுத்தக்கூடாது. பொதுமக்களுக்கு தேவையான அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும்.

மழை வருவதற்கு முன்பாக மழைநீர் கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும். மழைநீர் தேங்காமல் 38வது வார்டில் புதிய மழை நீர் வடிகால் வகைகள் மற்றும் சுடுகாடு மற்றும் இடுகாடு பணிகள் அதற்கு இணைப்பாக சிறிய மேம்பால பணி பரமேஸ்வர நகர் பகுதியில் மளிகை கால்வாயில் கல்வெட்டை உயர்த்தும்பணி பொதுமக்களுக்கு தேவையான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் தொடங்கி செயல்படுத்த வேண்டும் என்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

அதேபோல் தி.மு.க. கவுன்சிலர் மணிமேகலை பேசும்போது, அதிகாரிகள் நம் சொல்லும் குறைகளை எதையும் கண்டு கொள்ளாமல் கிடப்பில் போடுகிறார்கள். என்னுடைய வார்டை சேர்ந்த மக்கள் பிரச்சினை தீர்ப்பதற்காக தான் என்னை தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அதை செய்து கொடுக்க வேண்டிய அதிகாரிகள் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்படுகிறார்கள். த.வெ.க. நிர்வாகிகளுடன் இணைந்து செயல்பட்டால், உங்களுடன் இணைந்து நாங்கள் செயல்படுவோம் என்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மன்ற கூட்டத்தில் கோரிக்கை வைத்தனர்.

இதனால் மன்ற கூட்டத்தில் பெரும் பரபரப்பும், சலசலப்பும் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 16 கோடியில் 46 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அதில் முக்கிய தீர்மானமாக மழை நீர் வடிகால்வாய் தூர்வாருதல், 34-ஆவது வார்டில் இருந்து 48-வது வார்டு வரை உள்ள 15 வார்டுகளிலும் இந்த பணிகள் செய்வதற்கு ஒரு கோடியே 20 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

38வது வார்டில் புதிய வினோபா நகர், அன்னை சந்தியா நகர் பிரதான சாலை எண்ணூர் நெடுஞ்சாலை பரமேஸ்வரி நகர் நேதாஜி நகர் ஆறாவது தெரு பகுதிகளில் மாமன்ற உறுப்பினர் சுமார் 60 லட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு கட்டிடம் தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் ஜெராக்ஸ் மிஷின் வாங்குவதற்கு மூன்று லட்சத்தை 99 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 42வது வார்டுக்கு உட்பட்ட மின் வாரியத்திற்கு ஜெராக்ஸ் மிஷின் பிரிண்டர் ஆகியவை வாங்குவதற்கு அஞ்சு லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, 39 வது வார்டுக்கு உட்பட்ட நான்கு இடங்களில் உள்ள ஆரம்ப பள்ளிகள் பழுது பார்ப்பதற்காக இரண்டு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது, இப்படி பல்வேறு பணிகள் செயல்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் செயற் பொறியாளர்கள், குடிநீர் வாரிய பகுதி பொறியாளர், சுகாதார அதிகாரி, மின்வாரிய அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள், பெரும் அளவில் கலந்து கொண்டனர்.

---

சேலம் மாநகராட்சியில் – குடிநீர் விநியோகம்

# தனியாருக்கு வழங்கியது, மக்கள் விரோத நடவடிக்கை!

## மாமன்ற உறுப்பினர் கண்டன அறிக்கை!

சேலம். ஜூலல 12-

சேலம் மாநகராட்சியில் குடிநீர் விநியோகப் பணியை தனியாருக்கு வழங்கக் கூடாது என்று மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும், அந்த தீர்மானத்தை முற்றிலும் புறக்கணித்து மீண்டும் தனியாருக்கு தண்ணீர் விநியோக ஒப்பந்தத்தை வழங்கியிருப்பது மக்கள் விரோத நடவடிக்கையாகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றத்தின் தீர்மானத்திற்கே மதிப்பளிக்காமல் செயல்படுவது ஜனநாயகத்தின் அடிப்படை நெறிமுறைகளுக்கு எதிரானது. பொது மக்களின் கருத்தையும், உள்ளாட்சி அமைப்பின் அதிகாரத்தையும் அலட்சியப்படுத்தி தனியாருக்கு ஆதரவாக செயல்படுவது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

குடிநீர் என்பது வணிகப் பொருள் அல்ல; அது மக்களின் அடிப்படை உரிமை. அந்த அத்தியாவசிய சேவையை தனியாரிடம் ஒப்படைப்பது மக்களின் நலனைக் காட்டிலும் தனியார் நிறுவனங்களின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாகவே பார்க்கப்படுகிறது.

எனவே, சேலம் மாநகராட்சி நிறைவேற்றிய தீர்மானத்திற்கு உரிய மரியாதை அளித்து, தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்து, குடிநீர் விநியோகத்தை முழுமையாக பொதுத்துறை மூலமே மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இல்லையெனில், மக்களின் நலனைக் காக்க ஜனநாயக வழியில் நடைபெறும் அனைத்து போராட்டங்களுக்கும் முழு பொறுப்பும் அரசுக்கே உரியது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

---

சிங்கம்புணரியில் – முன்னாள் அமைச்சர்

# செ.மாதவன் பிறந்தநாள் விழா! கால்பந்தாட்ட இறுதிப் போட்டி!

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்– வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குகிறார்!

சிங்கம்புணரி, ஜூலை 12 –

சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் 93 வது பிறந்த நாளை முன்னிட்டு மாதவன் கால்பந்து கழகம் சார்பாக பாரிவள்ளல் பள்ளியில் 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் 6ம் ஆண்டு மாநில அளவிலான கால்பந்தாட்டப் போட்டி 10 ம் தேதி தொடங்கியது.

விழாவிற்கு பள்ளித் தலைவர் வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம் தலைமை வகித்தார்.

பள்ளித் தாளாளர் அருளாளன், உமா அருளாளன் சாந்தி செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளி முதல்வர் சியாம் பிராங்க்ளின் டேவிட் வரவேற்றார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக டீன் மாணிக்கவாசகம் போட்டியை தொடங்கி வைத்தார். இறுதிப் போட்டி இன்று (12.07.2026 ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பரிசு வழங்கும் நிகழ்சியை தலைமை வகித்து தொடங்கி வைத்து பரிசு வழங்குகிறார்.

அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் சுப்பையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்

முன்னாள் எம்.எல்.ஏ, அருணகிரி, பேரூராட்சி தலைவர் அம்பலமுத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சுழற்கோப்பைகள் வழங்கப்படுகிறது. இப்போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளை அணிகள் கலந்து கொள்கின்றனர்.

இதில் தொழிலதிபர் ஆர்.எம்.எஸ்.சரவணன், ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், ஒன்றிய இளைரணி மனோகரன் பொதுக் குழு உறுப்பினர் சோமசுந்தரம், தொழிலதிபர் கணேசன், ஆசிரியர் சுப்பிரமணியன், மேலாளர்கள் கிருஷ்ணன், சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பெற்றோர் ஆசிரியர் மாணவர் மாணவியர் தலைவர் டாக்டர் ராஜ்குமார் உடற்கல்வி ஆசிரியர்கள் மணிமேகலை சின்னையா, சரண்யா பள்ளி ஆசிரியக்கள் நிர்வாகத்தினர் மாணவர்கள் கலந்த செய்கின்றனர்.

---



திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, ருத்ராவதி பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், குண்டடம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.சந்திரசேகர், ருத்ராவதி பேரூர் கழக செயலாளர் எஸ்.அன்பரசு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி 30 அ வட்டக் கழகத்தின் மூத்த முன்னோடி கழக உடன்பிறப்பு ஆர்.நாராயணன் வயது 82 அவர்கள் மறைவுற்றார். அன்னாரின் உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், வட்ட செயலாளர்கள் டி.சுந்தரம், புத்தகரம் இ.ஏழுமலை, எம்.சரவணன், குட்டி மோகன், துரை, ஸ்ரீராமு, கே. லட்சுமி காந்தன், ஜி.பார்த்தசாரதி, எஸ்.என்.கோதண்டன், இராமன், எஸ்.பி.கண்ணன், அபி, ரகுமான், சக்கரபாணி, வெங்கட்ராமன், கருணாநிதி, என்.ராஜு, காஞ்சி சண்முகம், கே.நரேந்திரன், ஆட்டோ ராதா, உமா மகேஸ்வரி மற்றும் மலர் கலந்து கொண்டனர்.